# இரண்டாவது அனைத்துலகத் தமிழியல்
# ஆய்வு மாநாடு - 2021

## "பன்முக நோக்கில் சங்க இலக்கியம்"

## ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்கள்:
**பேராசிரியர். ம.இரகுநாதன்**
**திரு. ஈ.குமரன்**

**2021**
**தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு** |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாசிரியர்கள் | : | **பேராசிரியர். ம. இரகுநாதன்** |
| | | **திரு. ஈ. குமரன்** |
| முதற்பதிப்பு | : | 2021 |
| வெளியிடுவோர் | : | தமிழ்த்துறை, |
| | | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| பக்க அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | |
| அச்சிட்டோர் | : | நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேற்) லிமிடெட், |
| | | யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-624-97806-3-7 |

# சங்க இலக்கியங்களில் திருமால் குறித்த கருத்தாடல்கள்

**திருச்செல்வம் கிஷாந்தினி,**
உதவி விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
இந்து கற்கைகள்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க காலத்தில் பல தெய்வ வழிபாடுகள் இருந்தன என்பதைச் சங்கச் சான்றோர் பாடல்களால் அறியலாம். திருமால், முருகன், கொற்றவை, வருணன், இந்திரன் முதலான தெய்வங்களைப் பற்றிய தகவல்கள் உள்ளன. சிவன் பற்றிய செய்திகளைப் புறநானூறு முதலான நூல்களில் காணலாம். பல தெய்வ வழிபாடுகள் மக்களிடையே இருந்தபோதிலும் சமயக் காழ்ப்புணர்ச்சியோடு மக்கள் நடந்து கொண்டதற்கான சான்றுகளை எந்த நூல்களிலும் காண முடியவில்லை. திருமாலும் முருகனும் அன்றைய மக்களால் பெரிதும் போற்றப்பட்டுவந்த தெய்வங்கள் என அறிய முடிகிறது. அவற்றுள்ளும் திருமாலைப் பற்றிய பாடல்களைப் பார்க்கும் போது "திருமாலே எல்லாம்" என்ற உணர்ச்சி தோன்றுமாறு அப்பாடல்வரிகள் அமைந்துள்ளன. திருமாலுக்கே "முழு முதன்மை" பேசப்படுகிறது என்று வைணவ மதத்தார் கூறுமளவிற்குத் திருமால் வழிபாடு சங்க நூல்களில் பேசப்பட்டதால் அத்திருமால் பற்றிய செய்திகள் சங்க காலத்தில் எவ்வாறிருந்தது என்பதைக் காணும் முயற்சியே இங்கு மேற்கொள்ளப்படுகிறது. சங்க இலக்கியங்களில் திருமாலைக் குறிக்கும் பெயரமைதிகள், திருமாலின் பண்பமைதிகள், திருமாலின் சிறப்பு, திருமாலும் திருமகளும், முல்லை நிலத்தில் திருமாலின் வகிபங்கு பற்றிய பல செய்திகள் இக்கட்டுரையில் உள்வாங்கப்பட்டு வெளிப்படுத்தப்பெறுகிறது. திருமால் பற்றிய ஆய்வு நிகழ்த்தும் இப்பகுதியில் சங்க இலக்கியங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப் பெறுகின்றன. சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ள பிற நூல்களும் இவ்வாய்வில் எடுத்தாளப் பெறுகின்றன. மேலும், திருமால் வழிபாடு வைதிக சமயத்தைச் சார்ந்திருப்பதால் வேதநெறியை விளக்கும் வடமொழி நூல்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** சங்க இலக்கியங்கள், திருமால், வழிபாடு, சமயம், வாழ்க்கை

**அறிமுகம்**

மக்கள் வாழ்க்கைக்கு இறைவழிபாடு இன்றியமையாதது. அது துன்பம் துடைத்து இன்பம் தரவல்லது. குறைகளை நீக்கவும், தேவைகளை வேண்டவும் அதனை மக்கள் பயன்படுத்துவர். ஒவ்வொருவரும் தெய்வத்தோடு தொடர்பு கொண்டு வாழவேண்டும் என்பதே வழிபாட்டின் நோக்கம் என்பர். திருமழிசையாழ்வார் கூட "வாசித்தும், கேட்டும், வணங்கி, வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது" என்பார். பண்டைக் காலந்தொட்டே தமிழரிடம் பக்தியும் தெய்வ வழிபாட்டு முறைகள் பலவும் இருந்து வந்துள்ளன. இதைத் தமிழ் இலக்கியங்களும் சிறப்புறக் காட்டுகின்றன. தமிழர் வழிபட்ட தெய்வங்கள் பல இருப்பினும் அவற்றுள் திருமால் முக்கிய இடம்பெறுகிறார். வேத காலம் தொட்டு வழிபடப்பட்டு வரும் தெய்வம் திருமால் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

**திருமாலைக் குறிக்கும் பெயரமைதிகள்**

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் திருமால் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. வடமொழியில் அமைந்துள்ள ரிக்வேதம், அரிவம்சம், விஷ்ணுபுராணம் ஆகியவற்றில் திருமால் பற்றிய செய்திகள் அமைந்துள்ளன. அரிவம்சம், ரிக்வேதம் கூறும் திருமாலின் பெயர்கள் சங்க நூல்களில் இல்லையெனினும் அவை உரைக்கும் திருமால் பண்புகளை விளக்கும் வகையில் பல்வேறு பெயர்கள் இடம்றெக் காண்கிறோம்.

மாயோன் (நற்றி. 32), மால் (முல்லைப்பாட்டு 1-3), திருமறுமார்பன் (பரி. 1:36-39), நேமியான் (முல்லைக்கலி 5:9-10), திகிரியோன் (முல்லைக்கலி 4:78-79), செல்வன் (பரி. 4:4-9), முதல்வன் (பரி. 3:41-45), முந்நீர்வண்ணன் (பெரும். 29-30), வெய்யோன் (புறம். 56:5-6), மாயவண்ணன் (ஏழாம்பத்து பதிகம் 9-10), அறிதுயிலோன் (பரி. 13:26-27), கேசவன் (பரி. 3:31-35) போன்ற பெயர்களால் திருமால் சங்க இலக்கியங்களில் போற்றப்படக் காண்கிறோம்.

திருமால் என்னும் தெய்வத்தைப் பல பெயர்களால் அழைத்தனர். அவற்றுள் ஒன்று "மாயோன்" என்பதாகும். மாயோன் என்ற சொல்லுக்கு "மாயையில் வல்லவன்" எனப் பொருள் கொள்ளுவர். மாயையில் வல்ல பண்பாளனை "மாயோன்" என்ற திருநாமத்தால் விளித்து வழிபட்டு வந்தனர் போலும். தொல்காப்பியத்திலும், சங்கப்பாடல்களிலும் திருமாலை மாயோன் என அழைத்திருப்பதைப் பல இடங்களில் காணலாம். முல்லை நிலத்துக்குரிய கடவுளாகத் தொல்காப்பியர் கூறுமிடத்து "மாயோன்" எனக் குறிப்பிடுகிறார். மாயோன் என்ற சொல் பெரியவன், கரியவன் என்ற பொருளில் பண்டை இலக்கியங்களில் வழங்கி வந்துள்ளது. கரிய நிறத்தன் என்ற பொருளில் மாயோன் என்ற சொல் ஆளப்பெற்றிருத்தல் வேண்டும். ஏனென்றால் பிற்காலத்து திருமால் அடியார்கள் அவனைக் "கண்ணன் என்னும் கருந்தெய்வம்" (நாச்சியார் திருமொழி13:1-1) என்றும், அவன் நிறத்தை "பச்சை மாமலை போல் மேனி" (நாலாயிர தி.பிர. 873) என்றும் பாடியிருத்தல் காணலாம்.

மாயோனாகிய திருமாலின் தொழில் காத்தல் தொழிலாகும். அத்தொழிலை அவன் செம்மையாகச் செய்வதால் அவனுக்குப் புகழ் கிட்டுகிறது. அவன் செய்யும் காத்தல் தொழிலின் சிறப்பைக் குறிப்பிடும் இடத்து,"மாயோன் விழுப்புகழ்" எனப் பாராட்டப்படுகிறது. பரிபாடலில் உலகத் தோற்றத்திற்கு ஆதி காரணனாக விளங்குபவன் திருமால் என்று கூறுமிடத்தும் ஆசிரியர் "மாயோன்" (பரி. 3:1-3) என விளிக்கிறார். திருமாலின் உந்தியில் தோன்றும் நான்முகன் வாழும் தாமரை மலரை மதுரை மாநகருக்கு உவமை காட்டுமிடத்தில் அவன் "மாயோன்" (பரி. 7:1-3) என அழைக்கப்படுகின்றான்.

திருமால் "மால்" என்ற பெயரோடும் பல இடங்களில் போற்றப்படக் காணலாம். மால் என் பதற்குப் "பெரியோன்" என்றும், மாயோன் என்பதற்குக் "கரியவன்" என்றும் பொருள் கூறுவர். முல் லைப்பாட்டில் அகன்ற இடத்தையுடைய வளைத்துச் சக்கரமும் சங்குமாகிய குறிகளையுடைய வனும் திருமகளை அணைத்தவனுமாகிய வலிய கைகளையுடையவனும், மாபலி வார்த்த நீர் தன் கையிலே சென்ற அளவிலே விரிவிடத்து வளத்தவனுமாகிய திருமால் போல என்று திருமால் உத்தம இலக்கணங்கள் பொருந்திய கைகளை உடையவன் என்றும், வாமன அவதாரத்திலே உலகளந்த தன்மையோடு கூறப்படுமிடத்துப் பேராற்றலும் பேருருவும் தோன்ற மால்" என அழைக்கப்படுகிறார்.

திருமாலுடைய துதிகளாக அவனது பல்வேறு சிறப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கூறுமிடத்துப் பொன்னிறக் கனிகளையுடைய பச்சை மேனியனாக "பொன்கல் பச்சை பைங்கல் மால்" (பரி. 3:81-90) என்று போற்றப்படுகிறார். முல்லைக்கலியில் இவன்தான் அவனுக்கு உரிய வன் என்று கூறி உறுதி காட்டுகின்ற திருமணத்திற்கு அருள் கொடுக்கின்ற தெய்வமாகத் திரு மாலைத் தோழி கூற் றிலே வைத்து ஆசிரியர் "தெய்வமால்" (முல்லைக்கலி. 7:32-33) என்று போற்றக் காணலாம்.

அகநானூற்றில் திருமாலின் கிருட்டிணவதாரச் செய்தியை உவமை காட்டுமிடத்து "மால்" என்று அழைக்கப்படுகிறார். யமுனையாற்றின் அகன்ற நீர்த்துறையிலே நீராடிய ஆயர் மகளிர், தன்னிய தழையாடையினை உடுத்திக் கொள்ளுமாறு குருந்த மரம் வளைந்திட மிதித்துத் தந்துதவிய திரு மாலான கண்ணனைப் போல என்று அவனது செயலை உவமை காட்டுமிடத்துத் திருமால், "மரம் செலமிதித்த மா அல்போல" (அகம். 59:3-6) என்று கூறுகிறார். இச்செய்தி கண் ணன் திருவிளை யாடல்கள் பழந்தமிழகத்துப் பரவியிருந்த பெருக்கத்தைக் காட்டவதாய் அமை கிறது.

சங்க காலத்தில் சமுதாயத்தில் பெண்களுக்குச் சிறப்பும் பெருமையும் கொடுக்கப்பட்டிருந்த முக்கி யத்துவத்தைக் காண்கிறோம். பல பெண்பாற் புலவர்களையும் அறிகிறோம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஔவை கூறியது போல ஆணும் பெண்ணும் கூடி வாழும் அன்பு வாழ்க்கை சங்ககாலத்தில் போற்றப்பட்டதை அறியலாம். கருணைக்கிருப்பிடமான பெண் களை முன்னிறுத்தித் தெய்வங்களும் போற்றப்பட்ட தன்மையினை அறியலாம். சிவனை உமை யொரு பாகனாகக் கண்டது போலவே திருமாலும் திருமகளை மார்பில் ஏந்தியவனாகத் திருமறு மார்பனாக அழைக்கப்பட்டார் என்று விஷ்ணு புராணம் கூறுகிறது. "திருமறுமார்பன்" என்ற இப்பொருள் தோன்ற முதற் பரிபாடலிலும் (பரி. 1:36-39), பெரும்பாணாற்றுப்படையிலும் (பெரும். 29-30) திருமால் குறிப்பிடப் படுகிறார். திருமகளைத் தன் மார்பிலே மறுவாகக் கொண்டவன் என்ற புராணக் கருத்துத் தோன்ற இங்ஙனம் அழைக்கப்படுதல் காண்கிறோம்.

"துளசி மாலையை அணிந்த செல்வன்" (பதிற். 4ம் பத்து 31:7-10) என்றும், "சிவந்த கண் களையுடைய செல்வன்" (பரி. 4:4-9) என்றும், "மலை போன்ற மார்பமைந்த செல்வன்" (முல் லைக்கலி 8:55-59) என்றும் திருமால் சங்க இலக்கியங்களில் செல்வனாகச் சிலவிடங்களில் அழைக்கப் படுகிறார்.

வேதமுதல்வன் என்று திருமால் பலவிடங்களில் பேசப்படுகிறார். "ஈயென்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய வேத முதல்வன் என்ப" (நற்றி. கடவுள் வாழ்த்து) என்று பாரதம் பாடிய பெருந் தேவனாரும், "பதினாயிரம் கைமுதுமொழி முதல்வ" (பரி. 3:41-45), "வாய்மொழி ஓடை மலர்ந்த நீ" (பரி. 3:13-15) என்ற பரிபாடலடிகளும் வேதத்தின் உட்பொருளாகவும் முதல்வனாகவும் திரு

மால் திகழ்வதை உணர்த்துகின்றன. இவ்வாறு வேத முதல்வனாகப் போற்றும் செய்தி, திரு மாலை பிரமன், தேவர் களின் தாய் அத்தி, நாதன் போன்றோர் வேதத்தின் உட்பொருளென்று பாராட்டுவதாக விஷ்ணு புராணம் கூறும் கருத்துக்கிணங்க அமைவதைக் காணலாம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பற்றிய பதிற்றுப்பத்தில் உலகைக் காக்கும் தன்மையி லும் அழியாத நல்ல புகழைப் பெற்றிருப்பினும் நெடியோனான திருமாலை ஒத்திருக்கிறான் என்று பாராட்டப்படுகிறான். (பதிற்று. 15:35-40) இச்செய்திகள் சங்க காலத்தில் சேர நாட்டில் திரு மாலுக்குப் பல சீர்கெழு விழாக்கள் நடைபெற்றன என்பதை உணர்த்துகின்றன. இங்கு "நெடி யோன்" என்ற சேரன் குறிக்கப்படுமிடத்து இப்பெயரினால் உலகளந்த திருமாலின் முழுமுதன்மை காட்டப்படுகிறது. பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையில் கச்சியின் சிறப்பைச் சொல்லும் பகுதியில் நீல நிறமுடைய நெடியவனுடைய உந்தியிலிருந்து நான்முகனாகிய ஒருவனைப் பெற் றெடுத்த பல இதழ்களையுடைய தாமரையின் வித்துப் போன்று அழகு விளங்கத் தோன்றிற்று. கச்சி என்று கூறுமிடத்தில், எல்லா உலகையும் படைக்க பிரமனையும் படைத்தவன் நீலநிற உரு வுடைய நெடியோனான திருமாலே என்று அவன் பரம்பொருளாகக் காட்டப்படுகிறான். (மதுரை. 456-60) இவ்வாறு திருமாலின் பரத்து வத்தைக் காட்டும் இடங்களில் இருநிலம் கடந்த, உல களந்த மாண்பினை விளக்கும் வகையில் "நெடி யோன்" என்ற பெயரால் குறிக்கப் போற்றக் காணலாம்.

புறநானூற்றில் நக்கீரனார் பாண்டியன் இளவந்திகை பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடு மிடத்து அவனது காத்தல் தொழிலைக் கடவுளரோடு உவமித்துப் போற்றுகிறார். இங்கு வலியில் பலரா மனையும், புகழால் பகைவரை அழித்த மாயோனையும் நீ ஒப்பவனாவாய் என்று போற்று மிடத்தில் கருடக் கொடியையுடைய வெற்றி வெய்யோனாகத் திருமால் காட்டப் பெறுகிறான். (புறம். 56:5-6) திருமாலுக்கு ஊர்தியாகக் கருடன் இருந்தமையும், நினைத்த பொழுதெல்லாம் அவன் வாகனமாகிப் பகைவரைப் பதற வைத்த செய்திகளையும் விஷ்ணுபுராணமும், அரிவம்சமும் கூறுகின்றன. இச்செய்தி மேற்குறித்த புறநானூற்று செய்திகளில் குறிப்பாகப் புலப்படக் காணலாம்.

பரிபாடலில் திருமால் அவரது காத்தற்பண்பு தோன்ற அறிதுயிலோனாகக் காட்டப்படுகிறான். இங்கு கன்னுருவின் வண்ணத்தோடு மாறுபட்டதான பாற்கடலின் நடுவிடத்தே மின்னொளி பரப்பும் சுடர் மணிகளைக் கொண்ட ஆயிரம் தலைகளை விரித்தபடியிருக்கும் ஆதிசேடனாகிய பாம் பணையின் மேலாகத் திருத்துழாய்மாலையைச் சூடியவனாய் அறிதுயில் கொள்ளும் காட்சி காட்டப் படுகிறது. இங்கு ஒருவனாயிருந்து அறிதுயிலோனாக, பலராமனாக, வராகமாக என்று மூவேறு உருக் கொண்டு முதற்கண் பிரிந்து நின்று விளங்கிய பெருமானே என்று திருமாலைப் போற்றுமிடத்து, உல கைக் காக்கும் பொருட்டு அறிதுயிலோனாகப் பாற்கடலில் பள்ளி கொண்ட தன்மை தோன்ற அழைக் கப்படுகின்றான். (பரி. 13:26-37)

### திருமாலின் பண்பமைதிகள்

கலித்தொகையில் சூரியன் மேற்குத் திசையில் மலையில் சென்று மறைய இருள் வந்த காட்சி யினை விளக்குமிடத்தில் "போரில் வல்ல சக்கரப் படையினையுடைய திருமாலின் நிறம் போல எம் மருங்கும் இருள் சூழ்ந்தது" என்று அவனது கரிய நிறத்தினை தோன்ற இயற்கைக் காட்சியில் வருணிக்கப்படுகிறான். பரிபாடலில் திருமாலின் திருமேனியழகு கூறப்படுகிறது. "நீருண்ட மேகம், காயாம் பூ, கடல், இருள், நீலமணிஐந்து பொருள்களையும் ஒக்கும் அழகு விளங்கும் திருமேனியை உடை யாய்" (பரி. 13:42-43) என்று போற்றப்படுகிறார்.

புறநானூற்றில் அரசர் இருவர் ஒருங்கிணைந்த தோற்றத்தை விளக்குமிடத்தில், "பால் நிறப் பனைக்கொடியோனும் நீலவண்ணத் திருமாலும்" ஒருங்கே இருந்த தோற்றத்திற்கு ஒப்பிடுகையில் அந்தக் காட்சியைக் காட்டிலும் இனியது வேறில்லை" என்கிறார் ஆசிரியர்.(புறம். 58-15) இங்கு திருமாலின் திருமேனி நிறம் புகழப்படக் காணலாம். திருமால் கழுவப்பட்ட அழகிய நீலமணி போன்ற திருமே னியுடன் வானுற ஓங்கிய கருடக் கொடியையும் ஆழியையும் ஏந்திய வன் என்று உரைக்கப்படுகிறார்.

"மாயோனன்ன மால்வரைக் கவாஅன்" (நற்றி. 32) என்று நற்றிணை மாயோனாகிய திரு மாலைப் போன்ற உயர்ந்த மலையின் சாரல் எனக் கூறப்படுகிறது. மாயோனாகிய திருமால் உயர்ந்தவன், எல்லையற்ற பரம்பொருள் என்றும் அவனது திருமேனியின் நிறம் பச்சை என்றும், "பச்சை மாமலை போல் மேனி" (நாலாயிர தி.பி 873) என்ற ஆழ்வார் ஒருவர் கூறுவது போல இங்கு கூறப்படுகிறது. திருமாலின் மேனியைப் போன்று மலைச்சாரலும் பசுமையுடன் அமைந் துள்ளதாகக் கபிலர் கூறுகிறார். அளக்கலாகல அளவினை உடைய மலை போன்று அளந்து கூறமுடியாத அளவற்ற பரம் பொருள் திருமால் எனலாம். எனவே, பரம்பொருள் எல்லையற்றது என்னும் தத்துவம் சங்க நூலாகிய நற்றிணையில் ஓரளவு கூறப்படுவதைக் காணலாம். திருமா லின் நிறம் பற்றி புராணங்கள் கூறும் கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் காட்டப்படும் திருமா லின் நிறம் பற்றிய செய்திகளோடு ஒத்துள் ளதைக் காணலாம்.

பரிபாடலின் திருமாலின் குன்றத்தில் மக்கள் திருமாலிடத்து மிக்க அன்பு கொண்டிருப் பார்களென்று கூறி, இக்குன்றத்தில் அவன் அமர்ந்திருக்கும் நிலையை எல்லா மக்களும் நினைந்து போற்ற வேண்டும் என்று கூறும்போது நிலை பெற்ற குளிர்ச்சியை உடைய இளவெயில் சூழ அதனி டையே இருள் வளர்வதைப் போல, பொன்னாலான ஆடையினையுடைய திருவண்ண மாமேனிய னான கண்ணன் பலராமனுடன் கூடி அமர்ந்திருக்கும் நிலையை நினையுங்கள் என்று ஆசிரியர் அறிவுறுத்துகிறார். இங்கு கண்ணனும் பலராமனுமாகிய அவ தாரங்களைக் கூறும் போது அவர்களது வண்ணமும் ஆடையின் அழகும் தோன்ற இளம் பெரும்வழுதியார் புனையக் காணலாம். நான்காம் பரிபாடலில் கறுத்த மேனியோடு முரண்பட்ட பொன்னிறமான பீதாம்பரத்தை உடையவனாக, நீல மலை பொன்னிச் செந்நெருப்புச் சூழ்ந்து கொண்டிருப்பது போன்ற பொன்னாலான பீதாம்பரத்தை உடையவனாகத் திருமால் ஆடையின் வண்ண அழகு தோன்றக் காட்டப்படுகிறான். (பரி. 15:1-6)

சங்க காலத்தில் நாடாண்ட மன்னர்களைப் போல தெய்வங்களுக்கும் அடையாள மாலை களை இட்டு வணங்கிய நிலையை அவ்விலக்கியங்கள் தெரிவிக்கின்றன. முருகன் கடம்பனாக, சிவன் கொன்றை மாலையனாகப் போற்றப்படுவதைப் போல திருமால் துழாய் (நீலநிற துளசி) மாலையனா கப் போற்றப்படுவதைச் சங்க இலக்கிய அடிகளால் அறியலாம்.

மணம் வீசும் கொத்துக்களையுடைய துளசி மாலையணிந்த சிறப்பினையுடையவன் திரு மால் என பதிற்றுப்பத்தும் (31:8-9), மணம் மிக்கு வீசுகின்ற பூங்கொத்துக்களையுடைய பூவிற் சிறந்த துழாய் மாலையையுடைய திருமால் என்று பரிபாடலும் (பரி. 15:1-6) திருமால் துளசி மாலையை அணிந்தவனாகச் சிறப்பிக்கின்றன.

**திருமாலின் கொடியும் ஊர்தியுமாகக் கருடன்**

பண்டைக் காலத்தில் நாடாண்ட மன்னர்கள் ஒவ்வொருவரும் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ள இலச்சினை பொறித்த கொடிகளைப் பயன்படுத்தியுள்ளனர். தமிழக வரலாற்றில் பாண்டியனுக்கு மீன் கொடியும், சோழனுக்குப் புலிக் கொடியும், சேரனுக்கு விற்கொடியும் இருந்த

தனை அறியலாம். மண்ணை ஆளும் மன்னனுக்குக் கொடி இருந்ததைப் போலவே மன்னு யிர்களை ஆளும் தெய் வங்களுக்கும் கொடி இருந்தமையை அறியலாம். சிவனுக்கு விடைக் கொடியும், முருகனுக்கு சேவற் கொடியும் இருந்ததை அறியலாம். இதுபோல் முல்லைநிலத் தெய்வமாகிய திருமாலுக்குரியதாகக் கருடக் கொடி இருந்ததைச் சங்கப் பனுவல்களில் (பரி. 3:59-60) பலவிடங்களில் காணலாம்.

திருமாலின் ஊர்தியான கருடன் திருமாலின் கொடியிலும் இடம்பெற்றுள்ள செய்தி பலவிடங் களில் கூறப்பட்டுள்ளது. "விரிந்த சிறகுகளை உடையவனாய்ப் பல நிறங்களைக் கொண்ட பாம்புகளுக் குப் பகைவனான கருடனைக் கொடியாகக் கொண்டு குறைவற்ற செல்வத்தை உடையவன் திருமால்" (பரி. 13:38-39) என்றும், "அவன் நச்சரவம் போன்று நல்லோருக்குத் தீங்கியற்றும் அரக்கர் முதலி யோரை அடர்த்து உயிர்களைப் பாதுகாப்பான் என்பதைக் குறிப்பால் உணர்த்துவது போல பலவாகிய வரிகளை உடைய அழகிய சிறகுகளையுடைய கருடனை அணி யாகக் கொண்ட கொடியை உடைய செல்வன்" என்றும் திருமுருகாற்றுப்படையில் (148-151) போற்றப்படுகிறார்.

பரிபாடலில் பரம்பொருளுக்கேயுரிய இயல்புகளைத் திருமாலுக்கு வைத்துக் கூறுகின்ற இடத்தில் கருடன் என்னும் பறவையாகிய உயர்ந்த கொடியை உடையவனான அவனே அப் பெருமைகளை உடையவன் என்று உயர் கடவுளுக்கு உயர் கொடியாகக் கருடன் காட்டப்படு கிறான்.(பரி. 2:50-60)

மேலும் திருமாலுக்கு உயர் கொடியாகக் கருடனைக் கூறுமிடத்தில் அவனது ஊர்தியாகிய கருடனே கன்னவர்களின் இன்னல்களைக் களைபவனும், தேவர்களை வெற்றி கொள்ளக் கூடியவனுமாகில் திருமால் தனது அடியவர்களின் துன்பத்தைப் போக்குவான் என்ற உணர்வு தோன்றவும் தேவர்களின் தலைவன் தேவாதி தேவன் என்று சொல்லாமலே பெறப்படும் என்ற கருத்திலும் இங்கு கருடக்கொடியின் சிறப்பும் திருமாலின் பெருமையும் ஒருசேர விளங்கும்படி ஆசிரியர் உணர்த்துகிறார். நான்காம் பரிபாடலில் "கருடனாகிய ஓங்கி நிற்கும் உயர்கொடி உடையவனே" என்று இக்கொடிக்குள்ள உயர்வு தோன்றக் கூறப்பட்டுள்ளது. விண்ணுயர் புட்கொடியோடும் வெற்றி வெய்யோனாயும் புற நானூற்று அடிகளால்(புறம். 56-3-6) திருமால் சுட்டப்படுகிறார். அத்தோடு இந்து புராணத்தில் இடம்பெறும் திருமாலின் ஊர்தியான கருடன் பற்றிய பல கதைச் செய்திகள் சங்க இலக்கியங்களில் கூறப் படும் கருத்துக்களோடு ஒத்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

**சங்கு - சக்கரம் உடையவன் திருமால்**

பரிபாடலில் செல்வனாகத் திருமாலை உருவகிக்குமிடங்களில் எல்லாம் நேமியோடு சார்த்தித் திருமால் புகழப்படுகிறார். சக்கரம் என்பது ஆளும் மன்னனுக்குரிய அடையாளச் சின்ன மாகக் கொள்ளப்படும். அதுபோல மன்னுயிர்களையெல்லாம் காக்கும் தெய்வமாகிய திருமாலும் அவனது சக்கராயுதமும் பெருமை தோன்றப் பலவிடங்களில் போற்றப்படுகிறார்.

பரிபாடலில் அழகியதாய், திருமாலுக்கு ஆயுதமாக மட்டுமன்றி அணிகலனாகவும் விளங் கும் திருச்சக்கரத்தை வலங்கொண்டு ஏந்திய முதல்வனே என்று போற்றுமிடத்தில் தன்னை எள்ளிய கார்க்கியா எனும் அந்தணனுக்குப் பிறந்த "காலயவனன்" என்பானை அழித்த திருமா லின் கிருட்டிணாவதாரச் செய்தி குறிப்பாக உணர்த்துகிறது. (முதற்பரிபாடல்)

### திருமாலும் திருமகளும்

சங்க இலக்கியங்களில் “திரு” என்ற சொல்லாட்சியும் திருமால் பற்றிய குறிப்புகளும் பலவிடங்களில் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் அழகு, செல்வம், இறையருள் எனப் பொருள் பெற்ற “திரு” காலப்போக்கில் மாற்றமடைந்துள்ள நிலையைக் காணலாம்.

அரிவம்சம், விஷ்ணுபுராணம், பத்மபுராணம் ஆகிய நூல்களில் திருமகள் பற்றிய கதை கூறப் படுகிறது. சங்க இலக்கியங்களில் வழங்கும் திருமகள் பற்றிய குறிப்புகள் மேற்கண்ட புரா ணக் குறிப்புகளுடன் ஒத்துள்ளன. அதுமட்டுமன்றி தொடக்க காலத்தில் திருமால் மார்பில் மறு வாகிப் பின் உருவாகி அதன்பின் திருமாலினின்றும் பிரிந்து தனித்த உருவமாகி காலப்போக்கில் தனித்தெய்வ வணக்கத்துக்குரியவளாக மாறிய திருமகளின் வளர்ச்சி நிலையைச் சங்க இலக் கியங்கள் காட்டுகின்றன.

திருமால் “ஸ்ரீவத்சக்குறி” தாங்கிய மார்பினனாகவே திகழ்ந்தான் எனப் பலவிடங்களில் விஷ்ணு புராணம் கூறுகிறது. சங்க இலக்கியங்களும் திருமால் பற்றிய கதைகளைப் பலவிடங் களில் கூறும்போது இக்கருத்தை ஏற்கும் விதத்தில் பேசுகிறது. “பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப”(பரி. 4-59), “திருவின் கணவ” (பரி. 3-90) என்று பரிபாடலாசிரியரும் “திருமறு மார்ப”(பெரும். 29) என்று பெரும்பாணாற்றுப்படையாசிரியரும் திருமாலைப் போற்றுகின்றனர். இக்குறிப்புக்களில் திருமாலின் மார்பில் மறுவாகவும் உருவாகவும் திகழும் திருமகளைக் காணலாம். திருமகளின் கணவன் திரு மால் என்றும் அறியற்பாலது. “மாயவன் மார்பில் திருப்போல்வன் சேர” (நெய்.கலி 28-64), “திருவரை யகலம்” (பரி. 13:1-13) போன்ற தொடர்கள் மாயவன் மார்பில் சேர்ந்த திருமகளைக் காட்டுகின்றன. பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப் பாட்டின் தொடக்கத்தில் திருமால் மாவலியிடம் நீர் ஏற்று ஓங்கி வளர்ந்த நிலை பனிக்கடல் பருகிக் கோடு கொண்டு எழுந்த மேகத்திற்கு உவமையாகக் கூறப்படு கிறது.(முல்லைப்பாட்டு 1-3) இவ் விடத்தில் “மாதாங்கு தடக்கை” என்ற தொடர் திருமகள் தனித்ததோர் உருவமாக உருப்பெற்றதை உணரலாம்.

### முல்லை நிலத்தில் திருமாலின் வகிபங்கு

மனித இனத்தின் படிப்படியான வளர்ச்சியை நில அமைப்போடு பாகுபடுத்தி வழங்கியிருந்த தன்மையை நிலப்பாகுபாட்டால் அறியலாம். அவற்றுள் பண்டைத் தமிழர்கள் காடும் காடு சார்ந்த பகுதியையுமே முல்லை நிலமாகக் கொண்டாடினர். வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருத மெனவும், மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சியும், கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தலு மாகப் பாகுபடுத்தினர். இவ்வாறு பாகுபாடு செய்து வாழ்ந்த தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நிலங் களில் வழிபாடியற்றிட தெய்வங்களையும் கற்பித்து வழிபாடு செய்தனர். அந்தவகையில்,

இலக்கியங்களில் முல்லை நிலத்திற்கு முதன்மை கொடுத்துப் பேசப்படுகிறது. முல்லை நில மக்கள் ஆயர்கள் தொடக்க காலத்தில் மக்கள் தங்களுடைய ஆடு, மாடு முதலிய கால்நடை களுடன் விளைச்சல் நிலங்களைத் தேடிச்சென்று விளைச்சல் இயற்கையாக அமைந்த முல்லை நிலத்தை வாழ்விடமாக அமைத்துக் கொண்டனர்.

தமிழ் மக்களின் தெய்வ வழிபாடு சங்க காலத்தில் ஒரு தனிப்பண்பாட்டுடன் விளங்கியது. தொல் காப்பியம் தமிழரின் அக வாழ்க்கை, புற வாழ்க்கைகளைக் கூறுகையில் அவர்கள் வழிபட்ட பழந் தமிழ்த் தெய்வங்களின் பெயர்களைக் கூறுகிறது. அது மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்கள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்களில் வழி படப்பட்டதைக் கூறுகிறது. முல்லை நிலத்திற்கென அமைத்துக் கொண்ட கடவுள் தான் திருமால் என அறியலாம்.

"மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல்.பொரு.அகத்.இ.பா.05) எனத் தொல்காப்பியர் முல்லை நிலத்திற்கும் முல்லை நிலத்தெய்வமான திருமாலுக்கும் முதலிடம் கொடுத்து முல்லை நிலத் துக்குரிய சிறப்புத் தெய்வமாகக் கொண்டு போற்றும் நிலையில் சிலவிடங்களில் அனை வருக்குமுரிய தெய்வமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையைச் சங்கச் சான்றோர் செய்யுள்களில் காணலாம்.

**பாம்பணையில் பள்ளி கொண்டோன் திருமால்**

அரவு அணை என்பது பாம்புப் படுக்கை ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டிருப்பவனாக திருமால் சொல்லப்படுகிறார். திருமாலுக்கு "நாராயணன்" என்ற பெறும் உண்டு. "நாரம்" என்பது நீர் எனவும் "அயனம்" என்பது படுக்கை எனப் பொருள்கொள்ளப்படு கிறது. எனவே நாராயணனாகிய திருமால் திருப்பாற்கடலில் பாம்புப் படுக்கையில் பள்ளி கொண் டிருக்கிறான் என்பது "நாராயணன்" என்ற சொல் அமைப்பில் தெரிய வருகிறது.(நெய்.கலி. 6:3-5)

**சங்கார மூர்த்தி திருமால்**

பிறப்பறுத்து வீடுபேறு அடைதல் மனித வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளப்பட்டது. அவ்வீடு பேற்றை எப்படி அடைவது, யார் அதைத் தருவார்? போன்ற சிந்தனைகளக்கு, திருமாலே வீடு பேற்றை நல்கக் கூடியவன் என்ற உண்மை உணர்த்தப்படுகிறது. பிறப்பறுத்து வீடுபேறு நல்கு பவன் திருமால் என்றும், திருமாலின் பாதம் தொழுவோருக்கு வீடுபேறு உரிமையுடைய தாகிவிடும் என்றும், அவனே பிறவித் துன்பங்களைக்களையும் தன்மையன் என்றும் சங்க இலக்கியங்களில் பலவிடங்களிலும் பல விதமாகத் திருமால் சுட்டப்பெறுகிறார்.

பரிபாடலில் திருமால் உலகில் அவதரித்தது உயிர்களுக்குப் பிறவித் துன்பத்தை நீக்கி வீட்டு லகை அளிப்பதற்கே என்று ஆசிரியர் சுட்டுகின்றார். பிறவித் துன்பத்தை நீக்குபவன், களைபவன், அழிப்பவன் என்பதனாலேயே திருமால் சங்கார மூர்த்தியாகவும் போற்றப்படுகிறார் போலும். "ஏறுதல் எளிதோ, வீறு பெறு துறக்கம்: அரிசின் பெறுதுறக்கம் மாலிருங்குன்றம்: எளிதின் பெறல் உரிமை ஏத்து கம் சிலம்ப" (பரி. 15. 16-18). இவை போன்ற சான்றுகளால் பிறவித்துன்பத்தை அழித்து, பிறவாமையை அளித்து, வீடுபேறாகிய துறக்கத்தைத் தருபவன் திருமால் என்று காட்டப்பட்டுப் பரம்பொருளாகக் காட்சி தந்து அவன் உலகனைத்தையும் படைத்தளித்து "அழிக் கும்" முதல்வனாகச் சங்க இலக்கியங்களில் போற்றப்படுகின்ற தன்மையினைக் காணலாம்.

**முடிவுரை**

தமிழ் நாட்டுப் பழங்குடியினராகிய முல்லைநிலத்து ஆயரிடையே முகிழ்த்த மாயோன் வழிபாடு தமிழ், வேத நெறிகளின் கலப்பின் விளைவாக வைதீகப் பெருந்தெய்வமாகவும் தமிழகத்தில் பரிணாம முற்றது. இதன் தொடர்ச்சியாகப் பக்திநெறிக்காலத்தில் கோலோச்சிய இருபெரும் தெய்வங்களில் ஒன்றாகச் சிறப்புற்றது. தொல்காப்பியத்தில் திருமால் குறித்துச் சுட்டப்பட்ட நிலத்தெய்வத்துக்குரிய பண் பமைதிகளைத் தவிர்ந்த புறநடையான சில விசேட அம்சங்களையும் சங்க இலக்கியங்களில் அடையா ளங்காண முடிகிறது. "திருமாலை" "சங் காரத்துக்குரிய தெய்வமாகவும் காட்சிப்படுத்தும் பரிபாடலடிகள் இதற்குத் தக்க சான்றாகும். மேலும் நிலத்தெய்வத்தைக் கடந்து "முழுமுதற்றன்மை" கொள்ளும் திருமாலை பரிபாடல் முன்னிறுத் தியுள்ளது.

இவ்வாறாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் திருமால் நிலத்தெய்வத்திலிருந்து "நெடுவரை மாலாக" முழுமுதற் பண்பு துலங்கும் பெருந்தெய்வமாகப் பரிணாமமுற்ற போக்கை அவதானிக்க முடிகிறது. இச்செல்நெறியின் வீறார்ந்த அடுத்த வளர்ச்சி நிலைகளாகவே சங்கமருவிய, பக்தி நெறிக்காலத் திருமால் வழிபாடு திகழ்கிறது எனலாம்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


* காசிவிசுவநாதன்.மு.,(1938).கலித்தொகை மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினி யாருரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
* சங்கரநாராயணன்.சி டி., (2002), நாச்சியார் திருமொழி, முல்லை நிலையம், சென்னை.
* சாமிநாதையர்.உ.வே.,(1961).பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியாருரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை.
* சாமிநாதையர்.உ.வே.,(1948).பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை.
* செயபால்.இரா.,(2004).அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.
* துரைசாமிப்பிள்ளை.மு.,(2008).பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
* துரைசாமிப்பிள்ளை.சு.,(2010).நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் ஐ, பூம்புகார் பதிப்பகம்.
* புலியூர்க்கேசிகன்.,(1958).புறநானூறு தெளிவான உரையுடன், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.
* பெருமாள்.அ.கா.,(2018).பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள், பாவை பிறிண்டேர்ஸ் (பி) லிமிடெட், சென்னை.